**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093811

1. District / மாவட்டம் : விருதுநகர் PS / காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு, விருதுநகர் Year / ஆண்டு: 2019 FIR No. / மு.த.அ. எண்: 5/2019 Date / நாள்: 05-03-2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/s 102 Cr.Pc r/w
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption Amendment Act, 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04-03-2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 மணி Time to : நேரம் வரை 1900 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அலுவலகம், வணிகவரித் துறை அலுவலகங்கள் கட்டடம், விருதுநகர். 6 கி.மீ. வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. சீ. மகேந்தி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சீனிவாசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1975 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி திணை ஆய்வுக்குழு அலுவலர், அருப்புக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. சொ. பூங்கோதை, உதவி ஆணையர்-3, உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அலுவலகம், விருதுநகர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

இன்று 05-03-2019 ஆம் தேதி மதியம் 3.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R. பூமிநாதன் ஆகிய நான் அலுவலகம் பணியில் இருக்கும்போது இணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. சீ. மகேஷ் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் மாவட்டம், விருதுநகர் உதவி ஆணையர்-3 (வணிக வரிகள்) அலுவலகத்தில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு அறிக்கை நாள். 04-03-2019 ஐ இணைத்து நடவடிக்கை (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ......R. பூமிநாதன்...... பதவி ......DSP...... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு Sivagangai V & AC...... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
(signed) 5/3/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signed)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
5.3.19. at 04.00 PM.

Name: பெயர் R. BOOMINATHAN,
Rank: நிலை INSP ... எண் DSP, V&AC, VNR.

<u>விருதுநகர் ஊதக பிரிவின் குற்ற எண்.05/2019 பிரிவு 102 Cr.PC r/w 7 of Prevention of Corruption Amendment Act 1988-ன் தொடர்ச்சி</u>: எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.சீ.மகேஷ் (44/19), துணை ஆய்வுக்குழு அலுவலர் / தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலன், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். பொருள்: விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அவர்கள் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்ததில் கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - புகார் அளித்தல் - தொடர்பாக. நான் 04.03.2019ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு அருப்புக்கோட்டை தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் (ஆதிதிராவிடர் நலன்) பணியில் இருந்தபோது, விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மேற்கே வி.வி.வி.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரிக்கு வடக்கே அமைந்துள்ள வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அவர்கள் திருப்புத்தொகை விண்ணப்ப அசல் ஆவணங்களை கொடுக்க வரும் வணிகர்களிடமும், ஏற்கனவே அசல் ஆவணங்களை சமர்ப்பித்து கருவூலம் மூலமாக வணிகர்களுக்கு சேரவேண்டிய பணத்தை வணிகர்களுக்கு பெற்றுக்கொடுத்ததற்காகவும் வணிகர்களிடமிருந்து கையூட்டுப் பணம் கேட்டுப்பெறப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி நான் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்து, விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆளிநர்களுடன் 04.03.2019ஆம் தேதி பிற்பகல் 4.45 மணிக்கு புறப்பட்டுச்சென்று விருதுநகர் மாவட்டம், விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மேற்கே வி.வி.வி.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரிக்கு வடக்கே அமைந்துள்ள வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அவர்கள் அலுவலகத்தில் 04.03.2019ஆம் தேதி மாலை 5.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை என்னுடைய தலைமையில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வில் மேற்படி அலுவலகத்தில் உதவி ஆணையர்-3 அறையில் இருந்த உதவி ஆணையர்-3 திருமதி.சொ.பூங்கோதை அவர்களது

கைப்பையிலிருந்த ரூ.29,900/-மும், மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ரவியிடம் உதவி ஆணையர்-3 திருமதி.பூங்கோதை கொடுத்துவைத்திருந்த பணம் ரூ.3000/- ஆக மொத்தம் ரூ.32,900/-ஐ கணக்கில் காட்டமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன மொத்த தொகை ரூ.32,900/-ஐ உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) திருமதி.சொ.பூங்கோதை அவர்கள் அவரது அலுவலக அறையில் இருந்துகொண்டு திருப்புத்தொகை விண்ணப்ப அசல் ஆவணங்களை கொடுக்க வரும் வணிகர்களிடமிருந்தும் மற்றும் ஏற்கனவே அசல் ஆவணங்களை சமர்ப்பித்து கருவூலம் மூலமாக வணிகர்களுக்கு சேரவேண்டிய பணத்தை பெற்றுக்கொடுத்ததற்காகவும் கேட்டுப்பெற்ற கையூட்டுப் பணமாக இருக்கலாம் என கருதி, அந்த தொகை ரூ.32,900/- கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 04.03.2019ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 7.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம்:- திடீர் இணை ஆய்வு வணிகவரித்துறை அலுவலகம், விருதுநகர் திடீர் சோதனை அறிக்கை நாள்.04.03.2019 விருதுநகர் மாவட்டம், விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மேற்கே வி.வி.வி.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரிக்கு வடக்கே அமைந்துள்ள வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அவர்கள் திருப்புத்தொகை விண்ணப்ப அசல் ஆவணங்களை கொடுக்க வரும் வணிகர்களிடம் கையூட்டுப் பணம் பெறப்படுவதாக இரகசிய தகவல் வரப்பெற்றதைத் தொடர்ந்து கீழ்கண்ட அலுவலர்களின் முன்னிலையில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதன் அறிக்கை. முன்னிலை:- 1.திரு.சீ.மகேஷ் (44/19), துணை ஆய்வுக்குழு அலுவலர்/தனி வட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலன், அருப்புக்கோட்டை, 2.திரு.இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். இன்று 04.03.2019ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அலுவலகத்தை திடீர் தணிக்கை ஆய்வு மேற்கொண்டபோது, உதவி ஆணையர்-3 அறையில் உதவி ஆணையர்-3 திருமதி.சொ.பூங்கோதை (52/19) மற்றும் வணிகவரி அலுவலர்-3(முதன்மை) திருமதி.அ.சமீம் (46/19) ஆகியோர்களையும், அந்த (உதவி ஆணையர்-3) அறையையும், அவரது இருக்கை மற்றும் கைப்பையையும், மேலும் வணிகவரி அலுவலர்-3(முதன்மை) திருமதி.அ.சமீம் (46/19) அவர்களது இருக்கை மற்றும் கைப்பையையும், மேலும் உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அலுவலகத்தில் அவரவர் இருக்கையில் பணியில் இருந்த 1.திரு.பொ.கோவிந்தராஜன் (38/19),

கண்காணிப்பாளர், 2.திருமதி.பெ.பிரியதர்ஷினி (29/19), அ1 பிரிவு உதவியாளர், 3.திரு.கு.மணிகண்டன் (41/19), அ2 பிரிவு உதவியாளர், 4.திரு.ம.செந்தில்குமார் (27/19), அ3 பிரிவு உதவியாளர், 5.திருமதி.பெ.ஜெயப்பிரபா (39/19), அ4 பிரிவு உதவியாளர். 6.திருமதி.வெ.விஜயலட்சுமி (35/19), அ5 பிரிவு உதவியாளர். 7.திரு.தா.நாகராஜன் (35/19), அ6 பிரிவு உதவியாளர். 8.திருமதி.சி.செந்தாமரைதேவி (41/19), ஆ1 பிரிவு இளநிலை உதவியாளர், 9.திரு.சு.ரூபன்ஆனந்தராஜ் (25/19), ஆ2 பிரிவு இளநிலை உதவியாளர், 10.திருமதி.கு.நாகலட்சுமி (37/19), பதிவுறு எழுத்தர், 11.திரு.த.ரவி (58/19), அலுவலக உதவியாளர், 12.செல்வி.தி.வைஷ்ணவி (18/19), அலுவலக உதவியாளர் ஆகியோர்களது இருக்கை மற்றும் கைப்பைகளையும் தணிக்கை செய்தபோது உதவி ஆணையர்-3 திருமதி.பூங்கோதை அவர்களது கைப்பையில் ரூ.29,900/- இருந்தது. அதில் 2000 ரூபாய் நோட்டுக்கள் 14 எண்ணம், 500 ரூபாய் நோட்டு ஒரு எண்ணம், 200 ரூபாய் நோட்டுகள் 4 எண்ணம், 100 ரூபாய் நோட்டுக்கள் 6 எண்ணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே அந்த பணம் ரூ.29,900/- கணக்கில் காட்டமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. அதேபோல் உதவி ஆணையர்-3 அலுவலகத்திற்குள் நின்று கொண்டிருந்த அலுவலக உதவியாளர் திரு.த.ரவி என்பவரை சோதனை செய்தபோது, அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.4150/- இருந்தது. அந்தப் பணம்பற்றி கேட்க அதிலுள்ள ஒரு 2000 ரூபாய் நோட்டு மற்றும் இரண்டு 500 ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.3000/-ஐ உதவி ஆணையர்-3 திருமதி.பூங்கோதை அவர்கள் தன்னிடம் மாலை சுமார் 4.00 மணியளவில் கொடுத்ததாகவும், மீதமுள்ள பணம் தனது சொந்தப்பணம் என்றும் கூறினார். ஆகையால் அவரது சொந்தப்பணத்தை அவரிடமே கொடுத்துவிட்டு, உதவி ஆணையர்-3 கொடுத்ததாக சொன்ன ரூ.3000/- பற்றி உதவி ஆணையர் திருமதி.பூங்கோதையிடம் கேட்க, அவர் ஆமாசார், நான்தான் அவரிடம் கொடுத்தேன் என்றும் கூறி அந்தப்பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறிவில்லை. எனவே அந்தப்பணம் ரூ.3000/-த்தையும், உதவி ஆணையர் திருமதி.பூங்கோதையால் கணக்கில் காட்டமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. இதர பணியாளர்களிடமிருந்து கண்டறியப்பட்ட பணம் அவர்களது சொந்தப்பணம் என்று கூறியதால் திரும்ப அவர்களிடமே வழங்கப்பட்டது. எனவே மேற்படி உதவி ஆணையர்-3 திருமதி.பூங்கோதை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.29,900/- மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ரவியிடம் உதவி ஆணையர்-3 திருமதி.பூங்கோதை கொடுத்திருந்த பணம் ரூ.3000/- ஆக மொத்தம் ரூ.32,900/-ஐ கணக்கில் காட்டமுடியாத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. மேற்படி உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அலுவலக நிலையானமுன்பண பதிவேடு மற்றும் பணப்பதிவேடு ஆகியவற்றை சரிபார்க்கப்பட்டதில் பதிவேடு பராமரிக்கப்பட்டு,

இன்றைய தேதி வரை நிலையானமுன்பண பதிவேட்டில் ரூ.1000/- இருப்பில் உள்ளது, அதற்கான பணப்பதிவேடு சரியாக இருந்தது. இந்த நடவடிக்கையின்போது உதவி ஆணையர்-3 (மாநிலவரிகள்) அலுவலகம், விருதுநகர் பகிர்மானப்பதிவேடு-2019 (1 முதல் 397 பக்கங்கள் கொண்டது) மற்றும் வருகைப்பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட திடீர் தணிக்கை இன்று (04.03.2019) இரவு 7.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (04.03.2019) எனது தலைமையில் விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மேற்கே வி.வி.வி.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரிக்கு வடக்கே அமைந்துள்ள வணிகவரித்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத்தில் கீழ்தளத்தில் உள்ள உதவி ஆணையர்-3 (வணிகவரிகள்) அவர்கள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வில் மேற்படி அலுவலகத்தில் உதவி ஆணையர்-3 அறையில் உதவி ஆணையர்-3 திருமதி.சொ.பூங்கோதை அவர்களின் கைப்பையிலிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.29,900/-க்கும் மற்றும் திருமதி.சொ.பூங்கோதை அவர்கள் அலுவலக உதவியாளர் திரு.ரவி என்பவரிடம் கொடுத்துவைத்திருந்த, ஆய்வுக்குழுவினரால் கைப்பற்றப்பட்ட ரூ.3,000/-க்கும் உதவி ஆணையர்-3 திருமதி.சொ.பூங்கோதை அவர்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாததால், அவர் அன்றையதினம் (04.03.2019) அவரது அலுவலக அறையில் இருந்துகொண்டு திருப்புத்தொகை விண்ணப்ப அசல் ஆவணங்களை கொடுக்க வரும் வணிகர்களிடமும், ஏற்கனவே அசல் ஆவணங்களை சமர்ப்பித்து கருவூலம் மூலமாக வணிகர்களுக்கு சேரவேண்டிய பணத்தை வணிகர்களுக்கு பெற்றுக்கொடுத்ததற்காகவும் வணிகர்களிடமிருந்து கையூட்டுப் பணம் கேட்டுப்பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி, அவர்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று 05.03.2019ம் தேதி மதியம் 3.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். (ஒப்பம்) (சீ.மகேஷ்), 5/3/19, துணை ஆய்வுக்குழு அலுவலர்/தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலன், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். Received a complaint registred a case in Virudhunagar V&AC Cr.No.05/19 U/s 102 Cr.Pc r/w 7 of PC (Amendment) Act-2018 on 5.3.2019 at 3.15 pm. FIR (original) and Complaint are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Spl.Judge, srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd) R.Boominathan, 5/3/19, Insp. of Police, V&AC, VNR.

5/3/19
Insp of Police
V&AC, VNR.